ISSN : 2456-821X அவையம் 3(2) Nov.2019 P.No. : 15 - 21




# "தாய்த்தெய்வ வழிபாட்டு மரபு எச்சங்கள் : திருப்பத்தூர் வட்டாரக் கள ஆய்வினை முன்வைத்து"

**முனைவர் ஆ. பிரபு**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்*
*வேலூர் மாவட்டம்.*

**கட்டுரை பெறப்பட்டது : 30.10.2019** **ஏற்கப்பட்டது : 28.11.2019**

**முன்னுரை**

ஆதிப் பொதுவுடைமைச் சமூகத்தில் பெண் தான் முன்னுரிமை பெற்றுத் திகழ்ந்திருக்கின்றாள். வேளாண்மை உக்தியைக் கண்டறிந்தவளும் பெண்தான் என்பது மானுடவியல் அறிஞர்களின் கருத்தாக உள்ளது. தவிர, வளமையின் குறியீடாகவும் பெண் கருதப்பட்டாள். இவ்வாறான நடைமுறைகள் இருந்த காலத்தைத் தாய்வழிச்சமூகம் என்பர். அக்காலத்தில் மழை பொழிய வேண்டி

வளமைச் சடங்குகள் நிகழ்த்தப்பட்டன. பெண் இவ்வாறு போற்றப்படுவதற்கு ஒரு பொதுவான நம்பிக்கைதான் காரணமாக இருந்திருக்க வேண்டும். அது 'தாய்மை'. ஓர் உயிரைச் சுமந்து பெற்றெடுக்கும் ஆற்றலைப் பெண் கொண்டிருந்தமையால் பெண் சமூகத்தின் படைப்புத் தன்மை கொண்டவளாக மதிக்கப்பட்டாள். இத்தகு நடைமுறையே பெண் தெய்வமாகவும் வழிபாட்டில் இடம்பெறத் தொடங்கினாள். அவ்வகையில், இக்கட்டுரையானது தாய்த்தெய்வ மரபு எச்சமாக அறியப்படும் மூதேவி குறித்தும் திருப்பத்தூர் பகுதியில் நடைபெற்ற கள ஆய்வில் கண்டறியப்பட்ட மூதேவி சிற்பங்கள் குறித்தும் ஆராய முற்படுகின்றது.

**தாய்த்தெய்வம் – மூத்ததேவி - மூதேவி**

இனக்குழு காலத்தைய தாய்த்தெய்வ மரபே பிற்கால அரசியல் மாற்றத்தால் மூத்தவள் என்று பொருள்படும் மூதேவியாக மாற்றம் கொண்டது. தமிழ் நிகண்டுகளில் தவ்வை, சேட்டை, மாமுகடி, மூத்ததேவி, பழையோள், காக்கை கொடியோள், ஏகவேணி எனப் பல பெயர்களில் அறியப்படும் இப்பெண் தெய்வத்தை வடமொழியில் ஜேஷ்டா என அழைப்பர். ஜேஷ்டா என்றால் 'மூத்த' என்று பொருள்படும். இத்தெய்வம் மற்றும் சிற்பம் தனியொரு நபரைக் குறிக்கக் கூடியதல்ல. அது ஒரு குறியீடு. அக்காலத்தைய மரபின் வெளிப்பாட்டாக அமைவதே ஆகும்.

தமிழ்நாட்டில் குறிப்பாக வடதமிழ்நாட்டில் பல்லவர் காலத்தைய மூதேவிச் சிற்பங்கள் ஆங்காங்கே கண்டறியப்பட்டுள்ளன. பெருத்த வயிறும், பருத்துச்சரிந்து காணப்படும் மார்பகங்களும் இவ்வகைச் சிற்பத்தின் பொது இயல்பாகும். இது

இவள் வளமை காட்டும் தாய்த் தெய்வம் என்பதை உறுதிப்படுத்தும். பருத்த வயிறுடனும், மார்பகங்களுடனும் பெண் தெய்வங்கள் பழங்காலம் தொட்டே வழிபடப்படுகின்றன. இவை, பிறப்பு உயிர்களை படைத்தல் ஆகியவற்றை உணர்த்தும் குறியீடுகளாகும்.

**மடவாளத்தில் கண்டறியப்பட்ட சிற்பம்**

திருப்பத்தூரை அடுத்த மடவாளம் பகுதியில் உள்ள சிவன் கோயில் அருகே பழைமையான வளமைச் சடங்கில் இடம்பெறும் மூத்த தேவி சிற்பம் கண்டறியப்பட்டது. இச்சிற்பமானது 5அடி உயரமும், 2 ½ அடி அகலமும் கொண்டதாகும். இரண்டடி நிலத்தினுள் புதைந்துள்ளது. வலப்புறம் காக்கையும் இடப்புறம் கழுதையும் இடம்பெற்றுள்ளது. கோரமான முகத்தோற்றமும், பருத்த மார்பும் இடது கையில் துடைப்பமும், வலக்கரத்தில் அபய முத்திரையுடனும் மூத்ததேவி காணப்படுகிறாள். கீழே வலப்புறம் காணப்படும் ஒரு ஆண் உருவம் உள்ளது. அவன் மூத்த தேவியின் மைந்தனான மாந்தன் ஆவான். இடப்புறம் காணப்படும் பெண் உருவம் இவளது மகளான மாந்தி ஆவாள். இச்சிற்பம் கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும்.



AD BONUM OPUS SACRED HEART COLLEGE



முதல் தேவி என்றும் மூத்த தேவி என்றும் அழைக்கப்பட்ட சொல் காலப்போக்கில் திரிந்து, மூதேவியாக மாறிவிட்டது என்று தெரிகிறது. மூதேவியின் கொடி காக்கைக் கொடி, வாகனம் கழுதை, கைக்கருவி விளக்குமாறு ஆகும்.

பொதுவாக அழுக்கின் தெய்வமாக இப்போது கருதப்படும் மூதேவியே வளமையின் மூலத்தெய்வமாக இருந்துள்ளது. பயிர்களும், உயிர்களுமாகிய செல்வங்களின் மூல வடிவம் உரமாகும். உரத்தின் மூலவடிவம் அழுக்காகும். மனிதர்கள் உள்ளிட்ட உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் ஆகியவற்றின் கழிவுகளே அழுக்கு என்ற பெயரால் சுட்டப்படுகின்றன. அழுக்கு என்ற சொல் அழுகச் செய்யப்படுவது என்ற பொருளையே உணர்த்துவதாகும். குப்பைகளை சேகரிக்கும் துடைப்பம், அழுக்குகளை சுமக்கும் கழுதை, எஞ்சியவற்றை உண்டு துப்புரவு பணி செய்யும் காக்கை ஆகியவை அழுக்குகளை உரமாக்கும் இயற்கையின் சக்திகளாக கொள்ளலாம். அரசமரத்தின் நிழல், விளாமரத்தின் அடி, விளக்கின் நிழல், மனிதர்

*நிழல், இருள், சாரமில்லாத அந்தணன் நிழல், உண்ட நீரின்எச்சில், ஆடை துவைத்த நீர், விளக்குமாற்றின் புழுதி, வெந்த சாம்பல், வேகாத கரிப்புழுதி, ஆட்டுத்தூசு ஆகியனவும் மூதேவியின் வாழிடங்களில் சிலவாக குறிப்பிடப்படுகின்றன. இங்குள்ள சிற்பமும் துணி துவைக்கும் இடத்தில் தான் உள்ளது. தவிர கைவிடப்பட்ட சிலை போல கேட்பாரற்று உள்ளது.*

*வரலாற்றை நோக்கும் போது, இத்தேவதையை பல்லவ பேரரசர்கள் தாங்கள் அமைத்த கோயில்களில் சிலை அமைத்து வழிபாடு நடத்தியதும், நந்திவர்ம பல்லவன் தவ்வையை குலதெய்வமாகவே வழிபட்டு வந்ததும் தெரியவருகிறது. பல்லவர்கள் காலத்திற்குப் பிறகு பிற்காலச் சோழர்களின் காலத்திலும், பாண்டியர் காலத்திலும் கி.பி.10-11ம் நூற்றாண்டு வரை தவ்வை வழிபாடு சிறப்புற்று இருந்துள்ளதை கல்வெட்டுகள், சிற்பங்கள் வாயிலாக அறிய முடிகிறது.*

***கட்டேரி பழையோள் புடைப்புக் கோட்டுருவம்***

*திருப்பத்தூரை அடுத்த ஜோலார்பேட்டை அருகிலுள்ள கட்டேரிக்கரையில் தாய்த்தெய்வ வழிபாட்டு மரபோடு தொடர்புடைய புடைப்புக் கோட்டுருவச் சிற்பம் பொரித்த கல் அப்பகுதியில் மேற்கொண்ட கள ஆய்வில் கண்டறியப்பட்டது.*



இப்புடைப்புக் கோட்டுருவமானது, பருத்த மார்பகங்களுடன் வலது பக்கம் பாம்புடனும் இடதுபக்கம் காக்கையும் தாங்கி ஏரிக்கும் கழனிக்குமிடையே உள்ளது. இப்புடைப்புக் கோட்டுருவமானது கி.பி. 8ஆம் நூற்றாண்டிற்கு முந்தையதாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

**முடிவுரை**

தமிழரின் தொன்மை வழிபாடு என்பது இயற்கையைச் சார்ந்தது. பண்டைத் தமிழர் தம் முன்னோரை 'நடுகல்' எனும் கற்களின் வடிவில் வழிபட்டு வந்தனர். பெண் தெய்வ வழிபாடும் இதில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தது. நிலத்தைப் பூமிதேவியாகவும், மழையை மாரியாகவும், நதிகளை நீராமகளிராகவும் போற்றும் பண்பாடு பண்டுதொட்டுத் தமிழர் மத்தியில் இருந்துவருகின்றது. அவ்வகையில் **பழையோள்** எனப்படும் மூத்த தேவி தாய்வழி மரபினை உணர்த்தும்

*வளமையின் குறியீடாகும். தவ்வை (167) என்றும் மாமுகடி (617) என்றும் வள்ளுவரால் சுட்டப்பட்டு; பழையோள், காடுகிழாள், கானமா செல்வி என்று தமிழ் இலக்கியங்கள் ஏற்றிப் போற்றும் மிகப் பழைமையான பெண்தெய்வமாக இதனை அறியமுடிகிறது. பல்லவர்களின் குல தெய்வமாகிய பின்னர் இவ்வழிபாடு கருவறைத் தெய்வமாக மாற்றப்பட்டது. அதற்கு முன்னர் இவ்வழிபாடானது தமிழர்களின் தாய்த்தெய்வ மரபாக விளங்கியது.*

AD OMNE OPUS BONUM INSTRUCTI
SACRED HEART COLLEGE